FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.நா.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 80690079

1. District மாவட்டம் : செங்கல்பட்டு
PS காவல்நிலையம் : சோழிங்கநல்லூர் குற்றப்புலனாய்வுத்துறை செங்கல்பட்டு மாவட்டம்
Year ஆண்டு : 2026 FIR No முத.அ. எண் : 03 Date நாள் : 09.09.2026

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 31.08.2026 @ 5 PM to 07.09.2026 @ 5.30PM
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை 08.09.2026 @ 6 PM

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.09.2026
Time நேரம் : at 10.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம் : on 09.09.2026 after registration of FIR @ 11.45hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தமிழ்நாடு கட்டுக்கோப்பு செயலியிலிருந்து எழுந்துவேலான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 11 kms. அடையிலிருந்து
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — அண்ணாநகர் மேற்கு, தாம்பரம் வரி மத்திய மேட்டு பட்டம், உதவி ஆணையர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.சிவகுமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : S.S.ராஜேந்திரன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் : இந்தியர்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : Business
(g) Address : முகவரி : Proprietor of M/s. Kalamani Associates, No. 269/2A, Mosque Street, Mannivakkam, Chennai-600048.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Jamuna, Asst. Commissioner of Commercial Tax, Tambaram Assessment circle, office at Greenways Road, K.A. Puram, Chennai-28.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.R. Sivakumar 9/9/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

09.09.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

V. Thamizhmani 09/09/2026

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் V. THAMIZHMANI
Rank: நிலை DY. SUPDT. OF POLICE, No. எண் .....
VAC, CC-III, Chennai.

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.03/AC/2026/CC-III சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : 09.09.2026ந்தேதி காலை 10.00 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 காவல் துணை கண்காணிப்பாளர் வீ.தமிழ்மணி ஆகிய நான், எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, காலை 10.30 மணியளவில் சென்னை-48, வண்டலூர், மண்ணிவாக்கம், கிழக்கு மாட வீதியில் ரூபி அடுக்கு மாடி குடியிருப்பில் நான்காவது தளத்தில் எண்.6 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.ஆர்.சிவகுமார், த/ பெ.கே.ராஜேந்திரன், என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3,துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய என்னிடம் தட்டச்சு செய்த எழுத்து மூலமான புகார் மனுவை கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்றும், படித்து பார்த்தும், அதனை தொடர்ந்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையகத்தில் காவல் கண்காணிப்பாளர் சென்னை நகரப்பிரிவு மூலம் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களுக்கு தகவல் தெரிவித்தும், பின்னர் புகார் மனு சம்பந்தமாக புலனாளிகள் மூலம் இரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வரித்துறை தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா என்பவரின் முன் நடத்தையும், புகார் மனுவின் உண்மை தன்மையும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் கூறப்பட்டுள்ள கையூட்டு தொடர்பான குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருப்பதால், காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு அவர்கள் மூலம் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களுக்கு தகவல் தெரிவித்தும், அனுமதி பெற்றும்,

இப்புகார் மனுவின் தன்மைக்கேற்ப இன்று 09.09.2026ந்தேதி காலை 11.30 மணிக்கு வணிக வரித்துறையின், தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா என்பவர் மீது சட்டப்பிரிவு-7, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம்-2018யின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு :

அனுப்புனர் ஆர்.சிவகுமார், த/பெ.கே.ராஜேந்திரன், Proprietor of M/s.Kalaimani Associaties, எண்.269/2ஏ, மதூதி தெரு, மண்ணிவாக்கம், சென்னை-48 பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை. அய்யா, நான், சென்னைக்கு அருகே உள்ள வண்டலூர், மண்ணிவாக்கம், கிழக்கு மாட வீதியில் ரூபி அடுக்குமாடி குடியிருப்பின் நான்காவது தளத்தில் எண்.6 என்ற முகவரியில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே உள்ள நுகும்பல் கிராமம் ஆகும். நான் சிவில் இன்ஜினியரிங்கில் இளநிலை பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் M/s.Kalaimani Associaties என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். நான் கடந்த 2007ம் ஆண்டு முதல் மேற்சொன்ன நிறுவனத்தின் மூலம் அனைத்து வகையான கட்டுமான பணிகள், அரசு ஒப்பந்தப்பணிகள் சப் கான்டிராக்ட் சிவில் ஒர்க் செய்வது மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகளையும் செய்து வருகிறேன். M/s.Kalaimani Associaties என்ற எனது நிறுவனத்தின் GST Registration Number 33AGVPR5428C2Z5 மற்றும் எனது நிறுவனத்தின் அதிகாரபூர்வ மின்னஞ்சல் முகவரி kalaimaniassociates@gmail.com ஆகும். எனது நிறுவனத்தின் GST consultant ஆக திரு.சங்கர் என்பவர் உள்ளார் கடந்த 25.06.2026ந்தேதி தமிழக அரசு வணிக வரித்துறையின் தாம்பரம் மண்டல உதவி ஆணையர் அவர்களின் GST portalயில் இருந்து எனது நிறுவனத்தின் GST portalக்கும் மற்றும் மேற்சொன்ன எனது நிறுவனத்தின் அதிகாரபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கும் "FORM GST DRC-01" நோட்டீஸ் அனுப்பியிருந்தார்கள். அதில் 2023-24ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின்

விநியோகங்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட மின்வழி ரசீதுகளை (E-Way Bills) சரிபார்த்ததில், வரி செலுத்துநர், தனது GSTR-1 அறிக்கையில் உரிய விலை பட்டியல்களை குறைவாக பதிவு செய்திருப்பதும், அதன் விளைவாக GSTR-3B அறிக்கையில் குறைவான வரி செலுத்தியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும். GSTR-2B-யில் பிரதிபலிக்கும் விவரங்களுடன் ஒப்பிட்டு வரி செலுத்துநரால் பெறப்பட்ட உள்ளீட்டு வரிச்சலுகை (Input Tax Credit-ITC) விவரங்களை சரிபார்த்ததில் அதிகப்படியான ITC கோரப்பட்டு பெறப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும், இதன் மூலமாக GST DRC-01 என்ற நோட்டீஸிற்கு வரி மற்றும் வட்டி, அபராதத்தொகை ஆக மொத்தம் ரூ.22,18,325/ செலுத்தவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 2017-18 முதல் 2022-23 வரையிலான நிதியாண்டுகளுக்காக தங்களால் தாக்கல் செய்யப்பட்ட வரி வருமான அறிக்கைகளை சரிபார்த்ததில் மேற்கண்ட முந்தைய நிதியாண்டுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிதியாண்டுகளில் தங்களது மொத்த Aggregate turnover ரூ.5 கோடியை தாண்டியிருப்பது தெரியவருகிறது. இதன் காரணமாக TNGST/CGST விதிகள் 2017ன் விதி48(4)ன் கீழ் மின்விலைப்பட்டியல் (E-Invoicing) முறையை கட்டாயமாக பின்பற்ற வேண்டிய நிலை தங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இவ்வாறு விதிமுறைகளை பின்பற்ற தவறியதற்காக TNGST/CGST சட்டம், 2017யில் பிரிவு-125 கீழ் CGST மற்றும் SGST கீழ் தனித்தனியாக ரூ25,000/- அபராதக்கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் மேற்சொன்ன அபராதம் ரூ.50,000/-த்துடன் e-Invoice போடாமல் இருந்தமைக்கும் சேர்த்து அபராதக்கட்டணம், Tax and Interest மற்றும் Fee சேர்த்து மொத்தமாக ரூ.1,28,694/-ஆன்லைனில் செலுத்தியும் மேலும் உதவி ஆணையர் தாம்பரம் வரிவிதிப்பு வட்டம் அவர்களின் GST Portalயில் கூறப்பட்டுள்ள எனது நிறுவனத்தின் மீதான மேற்சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு உதவி ஆணையர், தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம், கீரின்வேஸ் சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை-28 அவர்களின்

அலுவலக GST Portalயில் ஆன்லைனில் கடந்த 26.07.2026ந்தேதி விரிவான அறிக்கை (FORM GST DRC-03) தகுந்த ஆவணங்களின் நகல்களுடன் அனுப்பப்பட்டது. மேலும் தொடர்ந்து 27.08.2026ந்தேதியில் மற்றொரு நினைவூட்டும் கடிதத்துடன் E-way bill விவரங்களையும் சேர்த்து உதவி ஆணையர், தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்ட அலுவலரின் GST Portalயில் ஆன்லைனில் அனுப்பப்பட்டது. பின்னர் இது தொடர்பாக கடந்த 31.08.2026ந்தேதி மாலை சுமார் 5 மணியளவில் சென்னை, ராஜா அண்ணாமலைபுரம் கீரின்வேஸ் சாலையில் உள்ள வணிக வரித்துறை அலுவலகத்தில் தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, எனது நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கத்தினை தகுந்த ஆவணங்களுடன் தங்களது அலுவலக GST Portalக்கு ஆன்லைனில் பதில் அனுப்பப்பட்டுள்ளதை தெரிவித்தும், அதனை முடித்து வைக்கும்படி உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்களிடம் பணிவுடன் கேட்டு கொண்டேன். அப்போது வணிக வரித்துறை தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள் M/s.Kalaimani Associaties என்ற எனது நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சுமுகமாக முடித்து விடுவதாகவும், நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு இறுதி ஆணையையும் போட்டு விடுவதாகவும் அதற்கு, தனக்கு தனியாக ரூ.2 லட்சம் லஞ்சமாக கொடுக்கவேண்டும் என வற்புறுத்தினார். நான் என்னால் அவ்வளவு பணம் உடனே கொடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளதை தெரிவித்து அந்த அலுவலகத்தை விட்டு வந்து விட்டேன். பின்னர் எனக்கு அதிகமான களப்பணிகள் இருந்ததால் மேற்சொன்ன உதவி ஆணையர் அவர்களை நேரில் சென்று சந்திக்க முடியவில்லை. பின்னர் கடந்த 07.09.2026ந்தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் வணிக வரித்துறை, தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம், உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்களை அவரது அலுவலக அறையில் நேரில் சந்தித்து M/s.Kalaimani Associaties என்ற

எனது நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சுமுகமாக முடித்து கொடுக்கும்படி வேண்டி கேட்டு கொண்டேன். அப்போதும், உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள், மேற்சொன்ன நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சுமுகமாக முடித்து, நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு இறுதி ஆணை போட்டு விடுவதாகவும், அதற்கு தனக்கு தனியாக ரூ.2 லட்சம் கொடுக்க வேண்டும் என மீண்டும் வற்புறுத்தினார். மேலும் உதவி ஆணையர் தனக்கு தெரிந்த நபர் திரு.நடராஜன் என்பவர் சென்னை மேற்கு மாம்பலத்தில் இருப்பதாகவும், அவரிடம் தான் தனியாக கேட்ட பணம் ரூ.2 லட்சத்தை கொடுத்து விடும்படி கூறினார். தொடர்ந்து திரு.நடராஜன் அவர்களின் செல்போன் எண்ணை 9791763604 என்னிடம் கொடுத்து நாளை அவரிடம் பேசி விட்டு மேற்கு மாம்பலத்தில் நேரில் சந்தித்து நான் கேட்ட பணம் ரூ.2 லட்சத்தை அவரிடம் கொடுக்கும்படி கூறினார். பின்னர் இது தொடர்பாக உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள் மேற்சொன்ன திரு.நடராஜன் அவர்களை அவரது செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு பேசினார். திரு.நடராஜன் அவர்களிடம் பேசி முடித்தபின், உதவி ஆணையர், பணம் ரூ.2 லட்சம் வாங்குவது தொடர்பாக திரு.நடராஜன் சற்று தயக்கம் அடைவதால் நானே பணம் ரூ.2 லட்சத்தை உங்களிடம் இருந்து வாங்கி கொள்கிறேன் என தெரிவித்தார். மேலும் அவர் இப்போது பணம் எதுவும் இல்லையா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஊரிலிருந்து நேராக உதவி ஆணையராகிய தங்களை பார்க்க வந்ததால் பணம் எதுவும் தற்போது இல்லை என தெரிவித்தேன். மேலும் நான் அவரிடம் பணத்தில் negotiate செய்யும்படி வேண்டி கேட்டு கொண்டேன். அப்போது உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள், நான் கேட்ட மொத்த பணத்தில் ரூ.25,000/-குறைத்து கொண்டு, ரூ.1.75 லட்சம் தனக்கு தனியாக கொடுக்கும்படியும், பணத்துடன் வரும்படி கண்டிப்புடன் கூறினார். பின்னர் நான் உதவி ஆணையர் அவர்களின் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து விட்டேன். அன்றைய தினம் (07.09.2026)

மாலை சுமார் 6 மணியளவில் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள் வாட்ஸ் ஆப் காலில் என்னை அழைத்திருந்தார். நான் அடுத்த நாள் 08.09.2026ந்தேதி எனது செல்போன் எண்ணில் (9962664434) இருந்து உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்களை அவரது 8300301150 என்ற செல்போன் எண்ணிற்கு வாட்ஸ்ஆப் கால் மூலம் தொடர்பு கொண்டு பேசியபோது, உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள் என்னிடம், உங்களது விளக்கங்களை ஏற்றுக்கொண்டு இறுதி ஆணை உங்களது நிறுவனத்தின் GST portalக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்து, நான் கேட்ட பணத்தை அடுத்த நாள் கொண்டு வந்து கொடுக்கும்படி கூறினார். அப்போது நான் உதவி ஆணையர் அவர்களிடம் பணத்தை ரெடி செய்வதற்கு சிறிது கால அவகாசம் கேட்டேன். அதற்கு அவர் முதல் தவணையாக பணம் ரூ.1 லட்சம் கொடுக்கும்படியும், மீதித்தொகையை பணம் ரெடி செய்தவுடன் இரண்டு மூன்று நாட்களில் கொடுத்துவிட வேண்டும் என்று கூறினார். எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. எனக்கு தெரிந்தவர்களிடம் விசாரித்ததில் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கும்படி கூறினார்கள். நான் உதவி ஆணையர் திருமதி.ஜமுனா அவர்கள் முதல் தவணையாக லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1 லட்சம் கொண்டு வந்துள்ளேன். என்னிடம் எனது நிறுவனத்தின் மீதான் குற்றச்சாட்டுக்களை சுமுகமாக முடித்து, இறுதி ஆணை வழங்க ரூ.1.75 லட்சம் லஞ்சமாக கேட்ட வணிக வரித்துறை உதவி ஆணையர் தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் திருமதி.ஜமுனா அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் 07.09.2026ந்தேதி வணிக வரித்துறை உதவி ஆணையர் தாம்பரம் வரி மதிப்பீட்டு வட்டம் திருமதி.ஜமுனா அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து பேசியபோது நடைபெற்ற உரையாடல்களை எனது Vivo T5x 5G என்ற செல்போனில audio recording ஆக பதிவு செய்தேன். அவ்வாறு எனது செல்போனில் பதிவு செய்த audio recordingயை எனது அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்தும், அந்த உரையாடல் தொடர்பான audio recordingஐ Sandisk

Cruzer Blade USB 2.0 Flash Drive 16 GB என்ற pendrive-ல் copy செய்து இந்த புகார்மனுவுடன் சேர்த்து அளிக்கிறேன். இப்படிக்கு XX (ஆர்.சிவகுமார்) 9/9/2026

Sir, I received the complaint on 09.09.2026 at 10.30 hrs. in my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officers of the Directorate, I registered a case in V&AC Chennai City-III Crime No.03/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day 09.09.2026 at 11.30 hrs and taken up for investigation. Sd/- (V.THAMIZHMANI), DY.SUPDT.OF POLICE, V&AC, CC-III, Chennai. 09.09.2026

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கணம் முதன்மை அமர்வு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், சென்னை அவர்களுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

09/09/2026

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016